3rd February 1966]

திரு: து. ப. அழகமுத்து : கூட்டம் சேருவதற்காகவும் பொருட்காட்சி நடத்தலாம் அல்லவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கூட்டம் சேரும் என்று தெரிந்தால்தான் நடத்த முடியும். கூட்டம் சேருவதற்காக பொருள்காட்சி வைத்து கூட்டம் சேராமல் போனால் அது கேவலமாகப் போய் விடும்.

திரு. ஜே. மாதா கவுடர் : சீனு ஆக்கிரமிப்பின் போது எக்ஸிபிஷன் போன்றவைகளை நிறுத்த வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. இப்போது அந்த முடிவு ரத்து செய்யப்பட்டு விட்டதா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : எல்லா எக்ஸிபிஷன்களையும் நிறுத்துவதாக இல்லை. முன்பு எந்த எக்ஸிபிஷனுக இருந்தாலும் அதில் கலந்து கொள்வது என்ற கொள்கையை வைத்திருந்தோம். இப்போது பொதுவாக எந்த எந்த எக்ஸிபிஷன்களில் என்ன என்ன யூனிட்கள் கலந்து கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உதாரணமாக, ஜில்லா எக்ஸிபிஷனுக இருந்தால் ஜில்லாவில் உள்ள அக்ரிகல்சுரல், இண்டஸ்ட்ரீஸ் யூனிட்டுகள் தான் கலந்து கொள்ள வேண்டும். மாநில எக்ஸிபிஷனுக இருந்தால் பொதுவாக ராஜ்யத்தில் உள்ள பெரிய நிலையங்கள் கலந்து கொள்ளவேண்டுமென்று விதியைச் செய்திருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : இந்தப் பொருள்காட்சி திருச்சி நகரத்தில், என் தொகுதியில் நடைபெற்றது. அப்படியிருக்க திருச்சி நகர சட்ட மன்ற அங்கத்தினரை அதில் சேர்க்காததற்குக் காரணம் என்ன என்று கலெக்டரை அமைச்சர் அவர்கள் கேட்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ரொம்ப சின்ன விஷயம். இதைக் கேட்க தேவையில்லை என்று நினைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பொருள்காட்சி நடத்த இந்த விதமாக கச்சேரி தேவையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவைதான். இந்த நாட்டினுடைய அனுபவம் அப்படித்தான்.

MR. SPEAKER : Probably the hon. Member has no taste for it.

வடாற்காடு மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி

*63 கேள்வி.— புலவர் கா. கோவிந்தன், திரு. ர. ஜீவரத்னம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வடாற்காடு மாவட்டத்தில் நடைபெற்ற தொழில் கருத்தரங்கில், அம்மாவட்டத்தில் வாய்ப்பிருப்பதாகக் கண்ட தொழில்களை அம்மாவட்டத்தில் நிறுவ அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

[3rd February 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில் கருத்தரங்கில் நடைபெற்ற விவாதத்தில் முடிவு செய்யப்பட்டபடி, வட ஆற்காடு மாவட்டத்தில் தொடங்குவதற்கான வாய்ப்புள்ள தொழில்களின் பட்டியல் ஒன்று, புலவர் கா. கோவிந்தன் கேட்ட 70-ம் எண் நட்சத்திரக் குறியிடாத கேள்விக்குரிய பதிலாகச் சபைமுன் வைக்கப்பட்டது.

பல்வேறு தொழில்களில், குறிப்பாக அந்தந்த இடத்தில் கிடைக்கக் கூடிய தொழில் வளங்களையும் தொழில் திறனைர்களை யும் கண்டு அதற்கேற்ப முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைத் தொழில் முனைவர்களில் (Entrepreneurs) கவனத்திற்குக் கொண்டு வருவதே இத் தொழில் கருத்தரங்கின் நோக்கமாகும். குறிப் பிட்ட திட்டங்களுடன் தொழில் முனைவர்கள் முன்வந்தால் அரசாங்கம் அவர்களுக்குத் திண்ணமாய் உதவும்.

கனம் சபாநாயகர் அவர்களே தொழில் முனைவர்கள் என்று போட்டிருக்கிறது. அதை, தொழில் தொடங்குவோர் என்று சொல்வது நல்ல தமிழாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member, Pulavar K. Govindan, may please go to the seat allotted to him.

(Accordingly, the hon. Member, Pulavar K. Govindan occupied the seat allotted to him.)

புலவர் கா. கோவிந்தன் : எனக்குக் கொடுத்த அறிக்கையில், என்னென்ன தொழில்களுக்கு வாய்ப்பிருக்கிறது என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி அந்தத் தொழில்களை நடைமுறை க்குக் கொண்டு வருவதற்கு அரசு எடுத்துக் கொண்ட நடவடிக் கைகள் என்ன என்பது. அது குறித்து விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தத் தொழில்களை நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொன்னால் அதையொட்டி யாராவது தொழில் தொடங்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு முன்வருகிறார்கள் என்றால், இலாகாவில் இருந்து அதற்கான விவரங்களை எல்லாம் சேர்ப்பார்கள். பலர் அந்த விவரங்களை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விவரங்கள் கேட்டு தொழில்கள் தொடங்க முன்வருகிறபோது உதவிகள் அளிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர் களே, இப்படிப்பட்ட கருத்தரங்குகளின் மூலமாக உருப்படியான பலன் ஏதாவது ஏற்பட்டு இருக்கிறதா ? புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதாவது பயன் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படி யென்றால் இப்படிப்பட்ட கருத்தரங்குகள் எந்தெந்த மாவட்டங் களில் நடைபெற்றிருக்கின்றன ? இன்னும் எந்தெந்த மாவட்டங் களில் நடைபெற இருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக, இப்படிப்பட்ட கருத்தரங்குகள், தொழிலை நம்மால் எப்படி செய்ய முடியும், நம்மால் எப்படித் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியும் என்று

3rd February 1966]

பயங்கரமாக நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, தொழிற்சாலைகளை நாமும் அமைக்க முடியும் என்ற நிலையை உண்டுபண்ணுவதற்கு பயன்படுகின்றன. அவர்களுக்கு இருக்கின்ற பயத்தை போக்குகிறது. எந்தெந்த இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றனவோ அந்தந்த இடங்களில் தொழில்களை ஏற்படுத்த தொழில் அதிபர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு தொழில்களை ஏற்படுத்த முன் வருகிறார்கள். இதுவரை நான்கு ஜில்லாக்களில் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், கடந்த ஓராண்டு காலமாக இந்தக் கருத்தரங்குகள் நடத்துவதில் தடை ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், பொதுவாக நாட்டில் "இன்வெஸ்ட்மெண்ட் கிளைமெட்"—பணம் போடுவதற்கு சந்தர்ப்பம்—குறைவாக இருப்பதால் இப்படிப்பட்ட கருத்தரங்குகள் நடத்துவது பயன் அளிக்காது என்று சற்று ஒத்தி வைத்திருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : வட ஆற்காடு மாவட்டத்தில் நடைபெற்ற கருத்தரங்கில், அங்கே பல தொழில்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று முடிவு எடுத்ததாக விவரங்கள் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலுள்ள மண்டபத்தூர் என்ற இடத்தில் இரும்புக்கனி இருப்பதாக சொல்லப்படுகிறது. இது போன்ற கனிப் பொருட்களை உபயோகித்து சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த சர்க்கார் யாரையாவது அணுகி நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பத்து ஆண்டு காலமாக இந்த சர்க்கார் இதைத்தான் செய்துவருகிறது. சர்க்காரே ஒவ்வொருவரையும் கூப்பிட்டு ஏதாவது தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட தொழில் சம்பந்தமாக என்னிடம் இப்போது தகவல் இல்லை.

Steel casting plant at Arkonam

* 64 Q.—Sri S. MADHAVAN : } Will the Hon. the Minister
Sri V. SANKARAN : }
for Industries be pleased to state whether the Government have taken steps to set up a steel casting plant with Russian collaboration at Arkonam?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

திரு. செ. மாதவன் : ரஷ்ய நாட்டுடன் தொடர்பு கொள்ளப்பட்டதா ? இதற்கான அனுமதியை மத்திய சர்க்கார் கொடுத்துவிட்டதா ? இதை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இப்போது எந்த அளவில் இருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற எல்லாச் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்கின்ற முறையில் மத்திய சர்க்காரிடம் தொடர்பு கொண்டு இதற்கு வேண்டிய எல்லாவிதமான உத்தரவுகளும் பெற்று, ரஷ்ய நாட்டுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒப்பந்தமும் கையெழுத்தாகிவிட்டது. சீக்கிரத்தில் இது உற்பத்திக்கு வந்துவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.